Documentary films on Public Health.

* 93 *Q.*—Thiru A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct cinema theatres in Government hospitals in order to screen documentary films on Public Health; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு

*** 94 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நடமாடும் கண் வைத்தியசாலை செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் வேலைத் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்தக் கேள்வி சில காலத்திற்கு முன் எழுப்பப்பட்டுள்ளது. அப்போதிருந்த நிலவரப்படி சட்டப் பேரவையின் முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களது கண் சிகிச்சை முகாம் திட்டப்படி நடமாடும் வைத்தியசாலை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுமா? இதன் வேலைத் திட்டம் என்ன? எத்தனை ஆண்டுகள் இது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தொடங்கப்பட்டிருக்கிற முயற்சி எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல்படும். முன்பு நடமாடும் கண்சிகிச்சை மருத்துவ மனை சென்னையில் ஒன்றும், மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் ஒன்றும் நடைபெற்று வந்தது. அவர்கள் இருபது அல்லது இருபத்து நான்கு காம்புகள் வரை நடத்தி சிகிச்சை வழங்கினர். மேலும் அதனை விரிவுபடுத்த வேண்டுமென்ற முறையில் மதுரையில் 3 நடமாடும் கண் மருத்துவ குழுக்களும், சென்னையில் 2 நடமாடும் மருத்துவக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் கூடுமானவரையில் எல்லாப்

@ 654 -ம் பக்கத்தில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 12]

பகுதிகளிலும் பணியாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகம் செலவாவதால் பொதுமக்களிடம் இருந்தும், பல்வேறு நிறுவனங்களிடம் இருந்தும், பல்வேறு தொழிற்சாலை, கூட்டுறவு அமைப்புகள், சிமெண்ட், சர்க்கரை போன்ற ஆலைகளில் இருந்தும் நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. எந்த அளவு ஒத்துழைப்புக் கிடைக்கிறதோ அந்த அளவு முழுப் பணியும் நிறைவேற்றப் படும்

திரு. எம். தேவராசன் : சிகிச்சை பெறுகிறவர்களுக்கு கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டுமென்றால் அந்தக் கண்ணாடி இலவசமாக அளிக்கப்படுகிறதா? அல்லது கட்டணம் கண்ணாடிக்கு வசூலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கண்ணாடி போடுவது இரண்டு கட்டத்தில். ஒன்று கண்ணில் படலம் ஏற்பட்டு, அறுவைச் சிகிச்சை மூலம் பார்வை அளிக்கிறபோது. அதுபோல கண் சிகிச்சை பெற வருகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கு இலவசமாகவே கண் அறுவை சிகிச்சை முடிந்தவுடன் இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படுகிறது. வேறு சிலருக்கு—கண் பார்வை குறைவு ஏற்பட்டு—அறுவை சிகிச்சை தேவையில்லை—அடிக்கடி டெஸ்ட் பண்ணி கண்ணாடி போட்டுக்கொண்டால் போதுமானதாக இருக்கிற போது—எந்த வகை கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டும் என்பது டெஸ்ட் செய்யப்பட்டு குறிப்பு எழுதித் தரப்படுகிறது. அவர்கள் தமது சொந்தச் செலவில்தான் கண்ணாடி வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சென்னையில் 2 நடமாடும் மருத்துவக் குழுக்களும், மதுரையில் 3 குழுக்களும் இருப்பதாகச் சொன்னார்கள். சென்னையில் சிறந்த கண் மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. இதே போல் மதுரையிலும் இருக்கிறது. அப்படி இருக்கிற போது இங்கேயே இந்த நடமாடும் யூனிட்டுகளை வைக்காது மாவட்ட ரீதியில் யூனியன் சென்டர்களில் எல்லாம் இந்த வசதி ஏற்படத்தக்க வகையில் எதிர் காலத்திலாவது ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் எழுப்பிய கேள்வியின் நோக்கப்படி இப்போதுள்ள முறையில் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப் பட்டுத்தான் வருகிறது. ஒரு முகாம் என்று ஏற்படுத்தி நூற்றுக்கணக் கான பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்கிறபோது அவர்கள் ஒரு ஏழு நாட்களாவது அங்கேயே தங்கிச் சிகிச்சை பெறவேண்டியிருக்கிறது. அப்படி யின்றி வெளியில் அவர்களை அனுப்பிவிட்டால்—அவர்களது பொருளாதார வசதிக் குறைவினால் சரியாக கவனிக்காது போகிறபோது வேறு சில தொந்தரவு களுக்கு அவர்கள் உள்ளாக நேரிடும் என்று—அறுவை சிகிச்சை பெறுகிறவர்கள் அந்த இடத்திலேயே ஏழு நாட்களாவது தங்கிப் போக வகை செய்யப்படுகிறது.

அப்படி அவர்கள் தங்குவதனுல் அதிக அளவில் டாக்டர்கள், உதவியாளர்கள் அங்கே இருக்கவும் வேண்டியிருக்கிறது. ஆகவேதான் சென்னையில் இந்தக் குழுக்கள் இரண்டு இருந்தாலும் ஒரு தாலுக்கா, இரண்டு தாலுக்காவுக்கு ஒரு இடத்தில் முகாமிட்டு அந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் சிகிச்சை அளிக்கிறார்கள். சென்னையில் உள்ள இரண்டு குழுக்கள், சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களையும், வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களையும், மதுரையில் உள்ள மூன்று குழுக்கள் தஞ்சை, திருச்சி, கிழக்கு இராமநாதபுரத்தையும், கோயம்புத்தூர், நீலகிரி, சேலத்தையும், மதுரை, மேற்கு இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரியையும் கவனித்துக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

Leprosy Hospital at Colachel.

* 95 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is being given to the Colachel Leprosy Hospital in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof for the years 1970–71–72?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் ரூ. 54,054-ம் 1971-72-ம் ஆண்டில் ரூ. 51,894-ம் மொத்த அரசு மானியமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சார்லஸ் பீஸ் நினைவு மருத்துவ மனைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

(2) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.